# <u>பொள்ளாச்சி நகராட்சி</u>

## <u>18.06.2018 ல் நடைபெற்ற அவசரக் கூட்ட தீர்மானம்</u>

965) பொள்ளாச்சி நகராட்சி குப்பை கிடங்கு 16.68 ஏக்கர் பரப்பில் நகரின் வெளியே நல்லூரில் அமைந்துள்ளது. மேற்படி குப்பைக் கிடங்கில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்ட கழிவுகள் மலைபோல் காட்சியளிப்பதுடன், அருகிலுள்ள குடியிருப்புகளுக்கு சுற்றுப்புற சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையிலுள்ளது, மேற்படி குப்பை கிடங்கில் ஏற்படும் தீ விபத்துகளால் பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது மேலும் குப்பை கிடங்கில் 75 சதவீதம் பழைய கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதால், புதிதாக கொண்டு வரப்படும் கழிவுகளை உரம் தயாரிப்பதற்கான பணிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் ஏற்பட்டுள்ளது.

உரம் தயாரிக்க ஏதுவாக குப்பைக் கிடங்கில் உள்ள பழைய கழிவுகள் 95700 கனமீட்டர் அளவினை பயோமைனிங் (Bio mining) மூலம் அப்புறப்படுத்துவதற்கு ரூ.630.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை முழு மானியமாக பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்